22 MAY 1998

22 MAY 1998

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
கிடைக்கப்பெற்றது
20 MAY 1998
உரிய நடவடிக்கைக்காக
ஆணையாளர்

பாதுகாவலன்

PATHUKAVALAN

Registered as Catholic Weekly

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

மலர் 124 இதழ் 8 விலை 5 15-05-1998

தேவ அழைத்தல் தினம்
மே 15, 1998
சமூகத் தொடர்பு தினம்
மே, 24, 1998
சிறப்பிதழ்கள் .
உள்ளே—>
தூய ஆவியின் பெரு விழா
மே, 31, 1998

# கிறிஸ்தவ தொடர்பாளர்கள் நம்பிக்கையை அனுபவித்தால்தான் தொடர்புபடுத்தலாம்

—32 வது உலக சமூகத் தொடர்புதினச் செய்தியில் திருத்தந்தை

32-வது உலக சமூகத் தொடர்பு தினத்தை ஒட்டி திருத்தந்தை 2 ஆம் அருளப்பர் சின்னப்பர் வத்திக்கான் நகரிலிருந்து ''தூய ஆவியால் ஊட்டம் பெற்று நம்பிக்கையைத் தொடர்பு படுத்துங்கள்'' என்ற தலைப்பில் வெளியிட்ட செய்தியில் கிறிஸ்தவ தொடர்பாளர்கள் நம்பிக்கையை முதலில் தம் வாழ்வில் அனுபவித்தால் தான் மற்றவர்களுக்கு நம்பிக்கையைத் தொடர்பு படுத்த முடியும். இவர்கள் செபத்தின் மனிதர்களாகவும், மனிசிகளாகவும் இருந்தால்தான் இதனைச் செய்ய முடியும்.

"நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு விளக்கம் கூறும்படி யாராவது கேட்டால் தக்க விடை பகர எப்போதும் தயாராக இருங்கள்" (1 இரா. 3:15) என்ற நிலைக்கு பரிசுத்த ஆவியால் வல்லமை பெற்ற செபம் வலுவூட்டும். இப்படித் தான் கிறீஸ்தவ தொடர்பாளர்கள் நம்பிக்கையின் செய்தியை எமது கால மனிதருக்கும், மனுசிகளுக்கும் உண்மையின் அழுத்தத்துடன் கொடுக்கக் கற்றுக் கொள்ளுவார்கள். இவ்வாண்டு தூய ஆவிக்கென ஒதுக்கப்பட்ட ஆண்டாக இருப்பதால், தூய ஆவியால் ஊட்டம்பெற்று நம்பிக்கையைத் தொடர்பு படுத்துங்கள் என்ற தலைப்பில் திருத்தந்தை அவர்கள் சமூக தொடர்பு தினச் செய்தியை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

30க்கும் அதிக குருக்கள்! 20க்கும் அதிக கன்னியர்! 2000க்கும் அதிக இறைமக்கள்! குமுளமுனை விழாக்கோலம்! இரண்டு மணிநேர ஆடம்பரமற்ற அமைதியான வழிபாடு! சிறுவர்களும் பெரியவர்களும் குருத்துவ திருநிலைப்படுத்தலில் பக்தப்பரவசத்துடன் பங்கெடுத்தனர்.

# கிளி-முல்லை மறைக்கோட்டத்தில் தேவஅழைத்தல் பெருக இறைவன் தந்த அரிய வாய்ப்பு இதுவாகும்

*யாழ் ஆயர்

குமுளமுனையில் செபநேசரத்தினம் அடிகளின் குருத்துவ திருநிலைப்படுத்தலில் கலந்துகொண்டு அவரைக் குருவாகத் திருநிலைப்படுத்திய பின் யாழ் நகர் திரும்பிய யாழ் ஆயரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த திருநிலைப்படுத்தலை வன்னியில் வைக்க வேண்டுமென்று குருக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அங்கு வைக்கமுற்பட்டோம். பின்னர் குமுளமுனையில் வைக்கும்படி இறைமக்கள் கேட்டுக் கொண்டனர். அதற்கிணங்க அங்கு இதனை நிறைவேற்றினோம்.

இது கிளி-முல்லை மறைக் கோட்டத்தில் தேவ அழைத்தல் பெருக இறைவன் தந்த அரிய வாய்ப்பு என ஆயர் மேலும் தெரிவித்தார்.

குமுளமுனையில் அழகுற அமைக்கப்பட்ட பந்தல்களின் கீழ் ஆடம்பரமாக ஆயர் அழைத்து வரப்பட்ட பின் காலை 7 மணி முதல் 9 மணி வரை குருத்துவத் திருநிலைப் படுத்தல் வழிபாடு றெக்ஸ் சவுந்தரா அடிகளின் விளக்கவுரையோடு பக்தி உணர்வுடன் நடந்தேறியது. தவராஜசிங்கம் அடிகள் பீடப்பரிசாரகருக்கு உரிய பயிற்சியை வழங்கி இருந்தார். திருச்சிலுவைக் கன்னியர் பீட அமைப்பையும், அலங்காரங்களையும் கவனித்தனர். கிளிநொச்சி அரச அதிபர், சர்வதேச சங்க செஞ்சிலுவைப் பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். மறுநாள் செபநேசரத்தினம் அடிகள் முதல் திருப்பலியை அதே ஆலயத்தில் ஒப்புக் கொடுத்தார்.

## வத்திக்கானில் நிகழ்ந்த முதலாவது கொடூரக் கொலை!

சுவிஸ் காவல் பிரிவின் தலைமைத் தளபதி நியமிக்கப்பட்டு 10 மணி நேரத்தில் நடந்த — உலகைப் பரபரப்பூட்டிய சம்பவம்.

## பாப்பரசரின் தலைமைத் தளபதி சுட்டுக்கொலை!

4/5/98இல் வத்திக்கானில் இடம்பெற்ற முக்கொலைச் சம்பவத்தில் சுவிஸ் காவல் பிரிவின் தலைமைத் தளபதியும், அவரது மனைவியும், இளம் வீரர் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

1980இல் இருந்து சுவிஸ் காவல் பிரிவில் பணியாற்றி வந்த கப்ரன் கொமாண்டன் அலொயிஸ் சஸ்ரர்மன் (வயது 43) சுவிஸ் காவல் பிரிவின் தலைமைத்தளபதியாக பாப்பரசரால் நியமிக்கப்பட்டு 10 மணித்தியாலங்களுள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பாப்பரசரின் வெளிநாட்டுப் பயணங்களின் போது அவருக்கு துணையாக அடிக்கடி செல்பவரும், 1981இல் முகமது அலி அக்காவினால் பாப்பரசர் சுடப்பட்ட போது தன் உயிரைத் துச்சமென மதித்து பாப்பரசர் முன் பாய்ந்து மேலும் தாக்குதல் நிகழாதவாறு தடுத்ததன் மூலம் சிறப்புப் பாராட்டைப் பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகத்திலுள்ள மிகச் சிறியதும் கண்ணைக் கவரும் வகையில் அழகுற அமைக்கப்பட்டதுமான பாப்பரசரின் சுவிஸ் காவல் பிரிவில் 100 சுவிஸ் காவலர்கள் பணிபுரிகின்றனர்.

# ஒவ்வொரு பங்கிலும் முழுமையாக இயங்கும் சில அன்பியங்களையாவது உருவாக்குதல்

— அன்பிய உருவாக்கக் குழுவினரின் இவ்வாண்டிற்கான செயற்திட்டம்

அன்பிய உருவாக்கத்திற்கான குழுவினர் இவ்வாண்டிற்கான தமது செயற்திட்டத்தினை வெளியிட்டுள்ளனர். அன்பியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல், ஊக்குவிப்பாளர்களை உருவாக்குதல், ஊக்குவிப்பாளர்களுக்கு தலைமைத்துவ தொடர்பயிற்சி அளித்தல் என்ற அமைப்பில் இத்திட்டத்தினை செயற்படுத்தவுள்ளனர். (தொடர்ச்சி 2 ஆம் பக்கம்)

ஆண்டவரே நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும் [ திருப்பாடல்கள்-127-1]

# எம்கருத்து

## நாமும் நம்பிக்கையின் தொடர்பாளர்களாகலாம்!

வாழ்க்கையில் நம்பிக்கையை ஊட்டுவது ஒரு உன்னத பணியாகும்.

அந்தப் பணியை எமது சமூகத் தொடர்புகளிலும், உறவுகளிலும் நாம் எப்போதும் சிறப்பாக ஆற்றவேண்டும்.

2000 யூபிலி ஆண்டின் இரண்டாவது ஆயத்த ஆண்டான 1998 ஆம் ஆண்டு தூய ஆவிக்கு சிறப்பாக அர்ப்பணிக்கப்பட்ட ஆண்டாகும்.

தூய ஆவியானவர் மனித இதயங்களில் நம்பிக்கையின் பாதுகாப்பாளராக விளங்குகின்றார்.

இதனால் திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் தமது 32 ஆவது உலக சமூக தொடர்பு தினச் செய்தியில் ''தூய ஆவியால் உயிர் ஊட்டம் பெற்று நம்பிக்கையைத் தொடர்புபடுத்துங்கள்'' என்று அழைப்பு விடுத்துள்ளார்.

தூய ஆவியால் உயிர் ஊட்டம் பெற்றுள்ள இந்த நம்பிக்கையானது மனித இதயங்களில் நீண்ட தேடுதலோடு தொடர்புடையது. மனித இதயங்களில் ஏற்படும் மகிழ்ச்சிக்கான, நிறைவுக்கான, உண்மைக்கான, அமைதிக்கான, முழு மனித விடுதலைக்கான தேடுதல்களெல்லாம் இந்த நம்பிக்கையின் அடிப்படையானதே.

கிறிஸ்தவ தொடர்பாளர்கள் நம்பிக்கையை முதலில் தம் வாழ்வில் அனுபவித்தால்தான் அந் நம்பிக்கையை வெற்றிகரமாக மற்றவர்களுக்கு தொடர்பு படுத்த முடியும்.

தொடர்பாளர்கள் ''செபத்தின் மனிதர்'' களாக இருக்கின்ற போதுதான் இது சாத்தியமாகும். அப்போதுதான் ''நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு விளக்கங் கூறும்படி யாராவது கேட்டால் தக்க விடை பகர எப்போதும் தயாராய் இருங்கள்''. (1 இரா. 3:15) என்ற வசனத்தின்படி கிறிஸ்தவ தொடர்பாளர்கள் நம்பிக்கையின் செய்தியை இன்றைய கால மனிதர்களுக்கு உண்மையின் அழுத்தத்துடன் கொடுக்கக் கற்றுக்கொள்ளுவார்கள்.

தொடர்பாளர்கள் மட்டுமல்ல, தொடர்பு சாதனங்கள் கூட நம்பிக்கையூட்டுவனவாகவே இன்று விளங்குகின்றன. இன்றைய நவீன உலகின் தொழில் நுட்ப உயர்ச்சியும், விஞ்ஞான வளர்ச்சியும், மருத்துவத் துறையின் சான்றுகளும் சமூகத் தொடர்பின் வேகமும் இந்த நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றன.

நடைமுறையில் பொதுவாக தொடர்பாளர்கள் இயங்கும் தன்மையும், தொடர்பு சாதனங்களை இயக்கும் விதமும், பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

உண்மையை மறைத்தல், பொய்மையை வளர்த்தல், நீதியை மறுத்தல், நியாயத்தை ஓரங்கட்டுதல், நிம்மதியைக் குறைத்தல், அமைதியை ஒழித்தல் என்பவற்றிற்கு உழைத்தலும் துணைபோதலும்தொடர்பாளர்கள்பணியல்ல.

அரசியல் பக்கச்சார்பு வியாபார இலாப நோக்கு, இலஞ்சம் பெறல், பின்விளைவுகளுக்குப் பயந்து நடுநிலைமை வகிக்காமை, பொது அபிப்பிராயத்தை திரித்துவிடல் என்பவையெல்லாம் விசுவாசமான தொடர்பு வலுப்பெறுவதற்கு உயிரூட்ட வல்லன அல்ல.

தொடர்பு சாதனங்களை கண்மூடித்தனமாகப் பாவித்தல், முறைதவறிப் பிரயோகித்தல், மூர்க்கத்தனமாகச் செயற்படுத்தல், நெறிமுறைகளைப் பிறளவிடல் — இவைகளெல்லாம் தொடர்புசாதனங்கள் தவறாக இயக்கப்படும் விதத்திற்கு சான்றுகளாகும்.

கிறிஸ்தவ தொடர்பாளர்கள் இயங்கும் தன்மையும், தொடர்புசாதனங்களை இயக்கும் விதமும் நற்செய்தி மதிப்பீடுகளின் வழி அமையும் போதுதான் நம்பிக்கையூட்டும் உன்னத பணியாக அமைய முடியும்.

எமது அன்றாட அடிப்படை மனித தொடர்புகளில் எமது நல்வார்த்தையால், இனிய புன்சிரிப்பால், அரிய செயலால், இனியும் வாழ முடியும் என்ற நம்பிக்கையை போரின் மத்தியில் வாழும் எம் மக்களுக்கு கொடுக்கமுடியுமானால் நாமும் நம்பிக்கையின் உன்னத தொடர்பாளர்களே!

32ஆவது உலக சமூகத் தொடர்பு தின சிறப்பிதழ் மே24, ஞாயிறு 98

# தூய ஆவியால் ஊட்டம் பெற்று நம்பிக்கையை தொடர்பு படுத்துங்கள்

## தொடர்பு சாதனங்களில் சமூகத்தொடர்பு

வெகுஜன சாதனங்கள் தரும் செய்திகளையும், விளம்பரங்களையும் கலாச்சாரப் பண்புகளாக அப்படியே வழங்குகின்றன. இவைகளால் நன்மைகளைவிட தீமைகளே அதிகம் ஏற்படுகிறது. குறிப்பாக வார இதழில் சமுதாயக் குற்றங்களும், அசம்பாவிதங்களும், கற்பழிப்பு, தற்கொலை ஆகியன பரிந்துணர்வுடன் நோக்கப்படுவதில்லை. மாறாக கிளுகிளுப்பூட்டும் அல்லது பரபரப்பூட்டும் வியாபார வளர்ச்சிக்குத் துணைபோகும் செய்திகளாகவே இருக்கின்றன. எனவே ஒரு சமுதாய வளர்ச்சிக்கோ, மாற்றத்துக்கோ வித்திட முடியாமல் பத்திரிகைச் சாதனம் காணப்படுகிறது.

அடுத்து மிகக் குறுகிய காலத்துக்குள் யாழ். மக்களை வேகமாகவும், தீவிரமாகவும் எட்டிவிட்ட ஊடகம் தொலைக் காட்சியாகும். அதிலும் சக்தி வாய்ந்ததும், சாதனை மிக்கதுமான சினிமாவிற்கு பொழுதுபோக்கு ஒன்றே பிரதான நோக்கம். இதில் ஆபாச கதாபாத்திரங்கள், வசனங்கள், பாடல்கள் புகுத்தப்பட்டு வருகின்றன. இவற்றினை சிறுவர்கள் கருத்துப் புரியாமல் வாய்க்குள் முணுமுணுக்க இளைஞர் கோஷ்டிகள் அர்த்த பாவனையுடன் பயன்படுத்துகின்றன.

செல்வி குயின்மேரி

சினிமா பற்றிய செய்திகளைப் படிக்கவே பலர் வார இதழ்களை வாங்குகின்றனர். தமக்குப் பிடித்தமான கதாநாயக நாயகிகளின் படங்களை வைத்திருப்பது எம் மாணவரிடையே பெரிதும் பரவிவருகின்றது. மேலும் ஊடகங்களில் சொல்வப்படுகின்ற அல்லது காணப்படுகின்ற அறிவுபூர்வமான செய்திகளைத் தவிர்த்து சினிமா சம்பந்தமான மனைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளையே பார்க்க ஆவலாக உள்ளனர். அன்றாடக் கூலிக்காரர், அன்றைக்கன்று உழைத்து வாழ்பவர்கள்கூட தமது பிள்ளைகளின் பிறந்ததினம் மற்றும் பிற கொண்டாட்டத்தின் போது திரைப்படங்களைக் காட்டினால்தான் விழா நிறைவு பெறும் என எண்ணிக் கொள்கின்றனர். நெருக்கமான குடியிருப்புக்கள் அமைந்துள்ள பகுதிகளில் திரைப் படங்கள் காண்பிக்கப்படுவதனால் அதுவும் இரவில் வயது, பால் வேறுபாடின்றி அதனை ரசித்துப் பார்ப்பதால் பாலியல்சார் நெறிபிறழ்வுகள் நடக்க ஏதுவாக இருப்பதாகவும், ஏற்கனவே கல்வி செயற்பாட்டில் பின்தங்கியிருக்கும் அப்பகுதி மாணவர்களின் படிப்பறிவு இன்று பாதிப்புறுவதாகவும் சமூகசேவையாளர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

அண்மைக்காலமாக அதிகரித்துவரும் மதுபாவனைக் கடைகள், மினிசினிமா தியேட்டர்களின் திறப்புவிழாக்கள் பத்திரிகையில் விளம்பர வடிவில் வெளிவருகின்றன. தணிக்கை செய்யப்படாத, குடும்பமாக இருந்து பார்க்க முடியாத ஆபாச படங்களும் தாராளமாக இந்த மினி தியேட்டர்களில் காண்பிக்கப்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

# திருப்பலி வாசகங்கள்

1 ஆம் வாசகம் எசாயா 11 : 1 - 5

''ஆண்டவரின் ஆவி அவர் மேலே தங்கியிருக்கும்''

திருப்பா. 104 : 1 - 12

உமது ஆவியை நீர் அனுப்ப அவை படைக்கப் பெறுகின்றன. மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்.

2 ஆம் வாசகம் திருத்தூதர். 1 : 1 - 8

ஆனால் தூய ஆவி உங்களிடம் வரும் போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று ஜெருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்.

நற்செய்தி யோவான். 20 : 19 - 23

அவர்கள் மேல் ஊதி ''தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்''

**மன்றாட்டுக்கள்:**

★ எங்கள் பரிசுத்த தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பருக்காகவும் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்துக்காகவும், திருச்சபையின் சகல மேய்ப்பர்களுக்காகவும் மன்றாடுவோம்.

கிறிஸ்துவுக்கு இடைவிடாது சாட்சி பகரவேண்டிய பெலத்தை தூயஆவி இவர்களுக்கு கொடுக்கவும், அதனால் அவர்கள் சொல்வதையும், செய்வதையும் தொடர்புச் சாதனங்களினாலே மற்றவர்களுக்குக் கரிசனையுடன் அறிவிக்க அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

★ தொடர்புச்சாதனங்களை உற்பத்தி செய்பவர்களும் அதை வழிநடத்துபவர்களும், மேலும் இதில் பங்கு கொண்டு உழைப்பவர்களுமாகிய அனைவருக்காகவும் மன்றாடுவோம்.

இறைவனில் மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் என்ற தேவையை இவர்கள் ஆழமாக அறிந்து தம்மால் இயன்றளவு இத்தொடர்புகளுக்கு உழைக்கவேண்டுமென்று இறைவா......

★ எழுத்தாளர்களுக்காகச் செபிப்போம்.

இவர்கள் அந்தந்த இடத்துக்குரிய குழுமங்களிலுள்ள ஏழைகள், பெலவீனர்கள் மத்தியிலே அவர்களது தேவைக்கும், நம்பிக்கைக்கும் முக்கியத்துவம் கொடுப்பதிலே தங்கள் நுட்பங்களைப் பிரயோகிக்க வேண்டுமென்று இறைவா...

★ கிறிஸ்துவை அறிவிப்பவர்களுக்காகச் செபிப்போம்.

ஆண்களும், பெண்களும் செபத்தின் மனிதராகி, அதனால் முதலில் தங்கள் வாழ்வில் நம்பிக்கையை அனுபவிப்பவர்களாக தூயஆவியால் வலுப்பெற்று மற்றவர்கட்கு நம்பக்கூடிய சாட்சியாக வரவேண்டுமென்று இறைவா ...

★ பெற்றோருக்காக மன்றாடுவோம்.

தங்கள் பிள்ளைகள் தூயஆவியை அறிந்து அன்பு செய்து, இறைவனில் நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொடுப்பதில் பெற்றோருக்கு தொடர்புச்சாதனங்கள் தடையாயிராது அவர்களுக்கு உதவியாயிருக்க வேண்டுமென்று இறைவா...

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

# ஒவ்வொரு பங்கிலும்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்பிய உருவாக்கத்திற்கான குழுவினர் தமது இவ்வாண்டிற்கான செயற்திட்டங்களை வெளியிட்டுள்ளனர். 2000 ஆம் ஆண்டில் எமது பங்குகளை அன்பியங்களில் ஒன்றிணைப்பாக மாற்றுதல் என்ற யூபிலி ஆண்டிற்கான இலக்கை நோக்கி நகர்கையில் ஒவ்வொரு பங்கிலும் முழுமையாக இயங்கும் சில அன்பியங்களையாவது உருவாக்குதல் இவ்வாண்டிற்கான திட்டமாக அமைத்துள்ளனர். இந்த இலக்கை நோக்கி நகரும் வேளையில்:


1. அன்பியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
2. ஊக்குவிப்பாளர்களை ஊக்குவித்தல்.
3. ஊக்குவிப்பாளர்களுக்கு தலைமைத்துவ தொடர் பயிற்சி அளித்தல்.

ஆகியவற்றை தமது செயற் திட்டமாக்கியுள்ளனர்.

# தேவ அழைத்தல் சிறப்பிதழ்

## 15 வைகாசி 1998

## இளைய தலைமுறைக்கு ஒரு மடல்



அன்புத் தம்பி தங்கையரே!

ஆண்டவர் உங்களை அழைக்கிறார். ''வந்து பாருங்கள்'' என்று. வாருங்கள் வந்து பாருங்கள். ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்துப் பாருங்கள். மறைமாவட்டத்தினர், துறவற சபையினர் ஊடாக ஆண்டவர் உங்களை அழைக்கிறார். உங்கள் தெரிவுக்காக பல்வேறு துறவற சபைகள் உங்கள் முன் படைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொருவரினதும் கொள்கைகளும், நடைமுறைகளும். பணிகளும் சுருக்கமாக, தெளிவாக உங்கள் தெரிவுக்காக படைக்கப்பட்டுள்ளன, உங்கள் தெரிவு நல்லதாக அமையட்டும். இளம் பராயத்தை வீணாக்காதீர்கள். ''உமக்கு இன்னும் ஒன்று குறைபடுகிறது. நீர் போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும் அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்'' (மாற். 10/21) என்று செல்வந்த இளைஞனுக்கு கூறிய வார்த்தைகளை உங்களையும் பார்த்துக் கூறுகின்றார். ஏற்புடைய காலம் இதுவே, என்பதை உணர்ந்து ''காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்'' என்பதற்கு அமைய அர்ப்பணியுங்கள். உங்கள் இளமைப்பருவத்தை, ஆண்டவரின் பணிக்காக, கீழ்வரும் சபைகள் உங்கள் தெரிவுக்காக...

''அறுவடையின் ஆண்டவரைப் பார்த்து மன்றாடுங்கள்''

கிறிஸ்துவில் அன்புள்ள
அருள்தந்தை A. F. பெனட்
தேவ அழைத்தலுக்கான இயக்குனர்
யாழ். மறைமாவட்டம்.

## இன்று எம் குருத்துவப்பணி

இறை அழைத்தல் பல விதம். படைப்பின் சிகரமாகப் படைக்கப்பட்ட மனிதன் பிறப்பில் இருந்து இறப்புவரை ஏதோ ஒரு பணிக்காக அழைக்கப்படுகின்றான். அவனது தூய வாழ்வின் மூலம் இறைவனை மகிமைப்படுத்தவும், மேலும் திருமுழுக்கின் மூலம் நற்செய்திக்கு சாட்சியாக இவ்வுலகில் வாழ்ந்து, வாழ்க்கை மூலம் அவரது செய்தியை இவ்வுலகிற்கு புகட்டவும் ஒவ்வொருவரும் அழைக்கப்படுகின்றனர். அதிலும் ஒரு சிலரை தன்னுடைய நற்செய்தியை முழுநேரமும் அறிவிக்கவும் என தேர்ந்தெடுக்கின்றார்.

குருத்துவப் பணி என்பது இறைவனின் விசேட அழைத்தலிற்குட்பட்ட ஒரு அர்ப்பண வாழ்வாக இருக்கின்றது. கிறிஸ்தவர்கள் என்றமட்டில் நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவத்தின் பொதுக்குருத்துவத்தில் பங்கெடுத்தாலும், இவ் விசேட குருத்துவ அழைப்பு முற்றுமுழுதான ஒரு பணிக் குருத்துவத்தை மையப்படுத்துகின்ற அர்ப்பண வாழ்வாக அமைகின்றது. கிறிஸ்துவின் திருமுழுக்கில் பங்குபெறும் ஒவ்வொருவரும் அடிப்படையிலே நற்செய்திப்பணியில் ஈடுபட அழைக்கப்பட்டாலும், தூய ஆவியின் விசேட கொடைகளைப் பெறுகின்றவர்கள் சிலர் இத்தகைய பணிக்குருத்துவத்தை மையப்படுத்திய முழுமையான நற்செய்திப்பணிக்கு விசேட விதமாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

குருத்துவப்பணி என்பது சவால்கள் பலவற்றை எதிர் கொள்கின்ற வாழ்வாகி அமைவதன் உண்மைத் தன்மை,

---

அருள்திரு. அ. அகஸ்ரீன்

---

என்பது இயேசு தமது பணி வாழ்வில் எதிர்கொண்ட சவால்களை நோக்கும் போது தெளிவாகின்றது. அதிலும் மேலாக இன்று தொடர்கின்ற போர்ச் சூழலில் எமது மண்ணில் குருத்துவப்பணி என்பது மேலான சவால்களை எதிர்கொள்வதாக அமைகின்றது. குருத்துவப் பணி என்பது இன்று எமது மண்ணிலே தனியே வழிபாட்டுக் கொண்டாட்டங்களையும், திருவருட்சாதனக் கொண்டாட்டங்களையும் நிகழ்த்துவதும் பாரிய பங்குத் தளங்களை நிர்வகிப்பதுடனும் மட்டும் நின்றுவிடாது மக்களின் நாளாந்த வாழ்வின் போராட்டங்களில் பங்கெடுப்பதையும் அவர்களின் ஆன்மீக, சமூக. பொது நலன்களில் அவர்களுடன் இணைந்து பயனளிப்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

போரும் போராட்டமும் ஒருபுறத்தில் நிகழ்ந்து கொண்டிருக்க அவற்றின் விளைவுகளாக முளைத்தெழும் புதிய சவால்களாக கைதுகளும், காணாமல் போதலும் கொலைகளும், கொள்ளைகளும், கற்பழிப்புக்களும், சமூக விரோதச் செயல்களும் தலை தூக்க, எமது மக்கள் மறுபுறம் இடம்பெயர்வு இழப்புக்கள், வறுமை, வேலையின்மை, புதிய புதிய உடல் உளநோய்கள் என்பவற்றிற்கு முகம் கொடுக்க, நாம் எம்மை அர்ப்பணிக்கும் குருத்துவப் பணி எம்மிடம் புதிய அர்ப்பணத்தை எதிர் நோக்குகின்றது. உண்மைகள் மறைக்கப்படுவதும், அநீதிகள் தலை விரித்துத் தாண்டவம் ஆடுவதும், அன்றாட நிகழ்வாகி

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## யாழ். மறைமாவட்டக் குருக்கள்

**நோக்கம்:-**

மறை மாவட்ட தளத்திருச்சபையின் வளர்ச்சிக்கும், இறையரசைக் கட்டி எழுப்புவதற்கும் அயராது உழைத்தல்.

**பணிகள்:-**

- ★ மறைமாவட்டத்திலுள்ள பங்குத்தளங்களில் பணியாற்றுதல்.
- ★ பாடசாலைகளிலும், அனாதை இல்லங்களிலும், வைத்தியசாலைகளிலும் பணியாற்றுதல்.
- ★ மறைக்கல்வி, வழிபாடு, தனி மனித, சமூக உருவாக்கம், குடும்ப நலத்துறை போன்ற இறை மக்களுக்குரிய, இறையரசைப் பரப்பும் எவ்வித பணியிலும் காலத்தின் தேவைக்கு ஏற்ப பணியாற்றல்.

**கல்வித்தகைமைகள்:-**

ஆண்டு 9 இற்கும் ஆண்டு 13 இற்கும் இடைப்பட்ட கல்வி கற்கும் மாணவர்களும், A/L சித்தியடைந்த மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.

தொடர்பு:-

அருள்திரு றெஜி ராஜேஸ்வரன்
அதிபர்
புனித மாட்டீனார் குருமடம்
யாழ்ப்பாணம்.

தொடர்பு:-

அருள்திரு J. நிக்கலஸ்
அதிபர்
புனித சவேரியார் குருமடம்
கொழும்புத்துறை

## அமலமரித்தியாகிகள் சபை

சபையின் பெயர்:- அமல மரித்தியாகிகள்

சபையின் ஸ்தாபகம்:- 1826-02-17

சபையின் நோக்கம்:- எளியோர்க்கு நற்செய்தி நவில்தல்

சபையின் பணிகள்:- தியான திருவுரைகள் நிகழ்த்துவது ஆன்மீக நெறிப்படுத்தல், உடமைகளை இழந்தவர்க்கு புனர்வாழ்வு உறவுச் சீராக்கல்கள், உடல்-உள துணைவளமளித்தல், தூர நாடுகளில் நற்செய்தி மறைப்பணி, மருத்துவமனை ஆன்மீகப்பணி, நலிந்த பணித்தளங்களில் மறைப்பணி.

கல்வித்தகமைகள்:- ஆண்டு பத்தும் (year 10) அதற்கு மேற்பட்ட க. பொ. த. சா. த/உ. த முடித்தவர்கள்.

தியாக சகோதரர்களாகவும் இணைந்து பணியாற்ற சந்தர்ப்பம் உள்ளது. சந்நியாச வாழ்வை சகோதரர்கள் நிலையில் வாழ, துறவற வாக்குத் தந்தத்தின் மூலம் ஆண்டவன் சேவைக்கு அர்ப்பணம் செய்ய சந்தர்ப்பம் உண்டு.

தொடர்புகட்கு:

அருள்திரு. எட்வின் வசந்தராஜா
இயக்குனர்
அமல உற்பவம், சுவாமியார் வீதி.
கொழும்புத்துறை

## அப்போஸ்தலிக்க கார்மேல் சபை

சபையின் ஸ்தாபகம்: பேயான் (பிரான்ஸ்) 1868
இந்தியா 1870
இலங்கை 1922

சபையின் நோக்கம்: கல்வி புகட்டுதல்

பணிகள்:
- i கல்விச் செல்வம்
- ii அனாதைகளுக்கு புகலிடம்
- iii பங்குத் தளங்களில் பணி
- iv அன்புப் பணி: எளியோருக்கும், நலிந்தோருக்கும், புறக்கணிக்கப் பட்டோருக்கும்.

கல்வித் தகமை:
- i க. பொ. த (சா/த) தரத்துடன் நுண்கலைத் தகமை
- ii க. பொ. த (உ/த)

தொடர்பு: கார்மேல் மடம்,
ரெம்பிள்வீதி, யாழ்ப்பாணம்.

மருதமடு மாதாவே! எம் மத்தியில்
பரிசுத்தரான தேவதொண்டர்கள்
அதிகரிக்கச் செய்தருளும்.

# திருச்சிலுவைக் கன்னியர் சபை

**சபையின் ஸ்தாபனம்:**
மென்சிங்கன், சுவிற்சலாந்து.

**சபையின் நோக்கம்:**
துன்பப்படும் மக்கள் மத்தியில் பணி புரிந்து இறையன்பைப் பகிர்தல்.

**சபையின் பணிகள்:**
ஒருவனது வாழ்வு கருவறையில் ஆரம்பித்து கல்லறையில் அடங்கும் வரை எமது பணி தொடர்கிறது.

A. i வைத்திய சேவை — உடலினால் வேதனையுறும் ஒருவருக்கு அவரது தேவையை நிறைவு செய்து உள, ஆன்மீக தேவையை நிறைவு செய்ய இட்டுச் செல்கிறது.
எமது சகோதரிகள், வைத்தியர், தாதியர் — என மருத்துவத்துறையில் பல்வேறுபட்ட அங்கத்தினராகச் சேவையாற்றுகிறார். குழந்தையின் பிறப்புக்கு முன்னமே அதற்குரிய சேவை ஆரம்பித்து விடுகிறது.
(ii) நடமாடும் வைத்தியசேவை.

B. ஆசிரியர்கள் — பாலர் பராமரிப்பு இல்லம், Nursary கல்லூரிகள், பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணி புரிகிறார்கள்.

C. பங்குத் திருச்சபைகளில் — மறையாசிரியர். அன்பியற் கூட்டங்களில் கலந்து வீடுகள் தரிசித்து மக்களுடன் உறவாடல், இளைஞர்களுடன் இணைந்து செயற்படல்.

D சமூகப்பணி — தட்டச்சு கற்றுக்கொடுத்தல், பூக்கள் செய்யப்பழக்குதல், பல்வேறுபட்ட கைவேலைப்பாடுகள்.

E. எஸ்டேட்டுகளில் பணி புரிதல் (Pastoral Work)

F. வயோதிப இல்லம் — வாழ்வின் இறுதிநாட்களை அமைதியாகக் கழிப்பதற்கு, யாருமில்லாதவர்களை வயோதிப இல்லத்தில் பராமரித்தல்.

கல்வித் தகைமைகள் — A/L, O/L சித்தி அல்லது ஏதாவது தொழிற்துறைப் பயிற்சியும் அதன் சான்றிதலும்.

வயதெல்லை — 25 வயதுக்குட்பட்டவர்கள்.

குறிப்பு: கல்வித் தகைமைகள் வயது கவனத்திற் கொள்ளப்பட்ட போதும் தேவையேற்படின் அவர்களது ஆர்வத்தையும், செயற்திறனையும் முன்னிட்டு விதி விலக்கு அளிக்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

திருச்சிலுவைக் கன்னியர்சபை
புனித சூசையப்பர் வயோதிபர் இல்லம்,
கடற்கரை வீதி,
கொழும்புத்துறை

அல்லது

திருச்சிலுவை கன்னியர் மடம்
கடற்கரை வீதி.
யாழ்ப்பாணம்.

# திருக்குடும்ப கன்னியர் சபை

- திருக்குடும்பசபை ஒன்று, கிளைகள் நான்கு. அனைவருக்கும் எம் சபையில் இடமுண்டு.

1. திருக்குடும்ப அப்போஸ்தலிக்க குழுவினர்.
2. தியான யோக குழுவினர்.
3. திருமடச்சார்பற்ற குழுவினர்.
4. துணை அங்கத்தவர்கள் (இளைஞர், யுவதிகள், பெற்றோர், குருக்கள்)

- சபையின் நிறுவுனர்:-
வண பிதா. பீற்றர் பியன்வெனு நோஆய்
- சபையின் நோக்கம்:-
விசுவாசத்தை உறுதிப்படுத்தி அன்பைக் கட்டியெழுப்புதல்.
- சபையின் ஆன்மீகம்:-
'' இறைவன் மாத்திரமே ''
- சபையின் அருங்கொடை:-
ஐக்கியத்தைக் கட்டியெழுப்பி குடும்பங்களை உருவாக்குதல்.
- சபையின் பணிகள்:-
- கல்விப்பணி
- காலத்தின் தேவைக்கேற்ப திருச்சபையின் பணியில் ஈடுபடுதல், (பங்குப்பணி)
- இடம் பெயர்ந்தோர் மத்தியில் பணியாற்றுதல்,
- இளைஞர், யுவதிகளின் உருவாக்கம்,
- விடுதிச்சாலைகளை நடாத்துதல்,
- அனாதை இல்லங்களை நடாத்துதல்,
- உளவளர்ச்சி குன்றியவர்களைப் பராமரித்தல்,
- மறைக்கல்விப்பணி
- மறைபோதகப்பணி (நற்செய்தி அறிவிப்புப்பணியை மேற்கொள்ள வெளிநாடுகளில் சென்று பணியாற்றல்)
- கல்வித் தகைமைகள்:-
க. பொ. த. சாதாரணம், க. பொ. த. உயர்தரம், சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம்.
- தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
அழைத்தல் ஊக்குவிப்பாளர்
திருக்குடும்ப மாகாண இல்லம்,
121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# நல்லாயன் சபை

★ சபையின் ஸ்தாபகம்:
1835ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில்.

★ சபையின் நோக்கம்:
கிறிஸ்துவிற்கு நம்மை முழுமையாக அர்ப்பணிப்பதன் மூலம் ஒருவர் ஒருவரோடு அந்நியோன்னியமாக ஒன்றித்து அதை ஆத்ம வாஞ்சையில் வெளிப்படுத்தி அதனால் பிதாவுக்கு இடைவிடாது பரிகாரம் செய்து எல்லோருக்கும் சிறப்பாகச் சீவியத்தின் அனுபவங்களால் பாதிக்கப் பட்டோருக்கும் அறநெறி அவசியமானோர்க்கும் அன்பு, இரக்கம், நம்பிக்கையை அளித்து சாந்தமும் இரக்கமும் உள்ள நல்லாயனின் சுவிசேஷ பாஸ்கு சீவியத்தில் கிறிஸ்துவோடு முழுவதும் ஒன்றித்து வாழ்தல்.

★ சபையின் பணிகள்:
* தவறிப்போன இளம் பிள்ளைகளுக்கு வாழ்வு கொடுத்தல்.
* குழந்தைகளைப் பராமரித்தல்.
* அநாதைப் பிள்ளைகளைப் பராமரித்தல்.
* கல்வி கற்பித்தல்.
* மறைக் கல்வி கற்பித்தல்.
* பங்குகளில் பணி புரிதல்.

★ கல்வித் தகைமைகள்
உயர்தரம் சித்தியடைந்திருத்தல்.

★ சபையின் தலைவியின் பெயர்:
புனித மேரி யூப்பிறேசியா பெலற்றியர்

★ மாகாணத் தலைவியின் பெயர்
அருட்சகோதரி மேரி வினிபிறிடா பெரேரா

★ சபையின் திருநாள்:
நல்லாயன் திருநாள் வைகாசி 3ந் திகதி (பாஸ்குக் காலத்தின் 4 ஆம் ஞாயிறு)
புனித மேரி யூப்பிறேசியாவின் திருநாள் சித்திரை 24ந் திகதி

★ விலாசம்: நல்லாயன் இல்லம்
நவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.

# செபமாலைக் கன்னியர் சபை

★ **சபையின் ஸ்தாபகம்**
1948 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ஆந் திகதி

★ **இடம்**
இலங்கை — யாழ்ப்பாணம் — தோலகட்டி

★ **சபை ஸ்தாபகரின் பெயர்**
வணக்கத்துக்குரிய அருட்திரு தோமஸ் o. m i. அடிகளார்

★ **சபையின் நோக்கம்**
1. இறைவனின் மகிமையைப் பரப்பும் ஒரு கருவி.
2. இறை மகத்துவத்திற்கு அதியுன்னத ஆராதனை செலுத்தல்.
3. கிறிஸ்துவின் அரசை நிறுவுதல் — அன்பு, இரக்கம், பரிவு, பாசம் போன்றவைகள்.
4. நற்கருணை நாதர் முன் இரவும், பகலும் செபமாலை செபித்து மறையுண்மைகளைத் தியானித்தல்.
5. சொந்த நாட்டின் மனமாற்றத்திற்காக விசேஷமாக செபித்தல்.

★ **சபையின் பணிகள்**
1. நற்கருணைநாதர் முன்னிலையில் மக்களுக்காக பரிந்து பேசுதல், பரிகாரம் செய்தல், குழுவாகவோ தனியாகவோ வருபவர்களுடன் சேர்ந்து செபித்தல்.
2. நற்கருணை, செபமாலை பக்தியை சொல்லாலும் செயலாலும் பரப்புதல்.
3. I ஞானத்தியானம் செய்ய விரும்புபவர்களுக்கு எமது மடங்களில் இடம் அளித்தல்.
II ஞானத்தியானம் கொடுத்தல்.
4. ஏழைகளுக்கு உதவுமுகமாக, மடங்களில் வேலைவாய்ப்பு மனக்கவலைகளுடன் வருபவர்களுக்கு செவிமடுத்தல்.
5. I திருப்பலிக்குத் தேவையான உடைகள் ஒஸ்தி தயாரித்தல்.
II இயற்கை வளங்களைப் பெருக்குதல்,
குளிர்பான வகைகள் தயாரித்தல்,
மெழுகுவர்த்தி செய்தல்,
செபமாலை கட்டுதல் — போன்றவை

★ **கல்வித் தகைமைகள்**
G. C. E. (O / L) சாதாரண பரீட்சை சித்தியடையவேண்டும்.

★ **சபையின் பாதுகாவலி**
புனித செபமாலை அன்னை

★ **சபையின் திருவிழா**
ஐப்பசி 7

## இன்று எம்... (3 ஆம் பக்கத் தொடர்)

விட்ட எமது மண்ணில், மனித மாண்புகள் மதிக்கப்படாத, மரணங்கள் மலிந்து கொண்டு செல்கின்ற எமது மண்ணில் குருத்துவப் பணியை ஏற்கின்றோம் என்றால், அப்பணி வழமைக்கு மாறான, புதிய அர்ப்பணிப்புக்களையும் சௌகரியங்களைத்துறந்து, அசௌகரியங்களை ஏற்கின்ற மன நிலையையும், எம்மிலே வளர்த்துக்கொள்ள கேட்டு நிற்கின்றது.

இன்று எமது மண்ணில் குருத்துவப் பணி இயேசுவின் பணியின் அனைத்துப் பார்வைகளிலும் தரிசனம் பெறவேண்டிய தேவை அதிகமதிகமாக உணரப்படுகின்றது. எமது நற்செய்தி அறிவிப்புப்பணி நற்செய்தி முழக்கமாக மட்டுமன்றி, பலவித பணிகள் மூலமும் எமது தூய வாழ்வின் மூலமும் நற்செய்தி அறிவித்தலாக மாறவேண்டும்.

இப்படிப்பட்ட அர்ப்பணிப்புடன் எம்மை முழுமையாக அர்ப்பணிக்கின்றபோது "நான் குடிக்கப்போகும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா" (மத். 20/28) என்ற ஆண்டவரின் கேள்விக்கு நாமும் ஆம் என்று கூறமுடியும். அத் துணிவுடன் எம்மை அர்ப்பணித்து ஆண்டவரின் உண்மைச் சீடர்களாக எம் மண்ணில்திகழ்வோம்.

# திருவுளச் சபை

★ சபையின் ஸ்தாபகர்:-
அருட்திரு லூஜிமரி பரான் அ. ம. தி.

☆ ஸ்தாபனம்:-
கனடா 1958.

★ சபையின் நோக்கம்:-
சகோதரத்துவத்தையும், சமாதானத்தையும் கிறீஸ்து யேசுவில் கட்டியெழுப்புதல்.

☆ சபையின் பணிகள்:-
அவரவர் தராதரத்தில் எப்பணியும் ஆற்றலாம்.

★ உறுப்பினர்கள்:-
குருக்கள், மணத்துறவு ஏற்ற ஆண்கள், தம்பதியர்.

☆ கல்வித் தகைமைகள்:-
9 ஆம் ஆண்டுக்கு மேல்.

★ தொடர்பு: திருவடி,
341, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## உயிர்ப்பின் உன்னதத்தை - நாம் உணராமல் போனதுவேன் ...?

உறவுகளைப் பிரிந்து
ஊணுறக்கம் மறந்து
ஊமை நெஞ்சங்களாய் - எங்கும்
ஊனர்கள் ஆனோம் நாம்,
அன்பு, பொறுமை, பரிவு, விட்டுக்கொடுப்பு
நம்மை விட்டுப் பறந்து போன போதும்,
திருச்சபைத் தாயவள்
இழுத்துப் பிடித்து
தபசு காலத்தில் அதை
அரவணைத்துக் கொள்கிறாள்.
கிறிஸ்தவன் என்றொரு இனிய நாமம்
பெற்றதினால் நாமும் அதை
வலித்து அணைக்க முயலும்
சந்தர்ப்பங்கள் பற்பல
ஆனால்... என்சியது...?
எரிச்சலும் பொறாமையும் ஆணவமும் தான்.
ஏன்...?
கூடி வாழ்ந்த குருவிகள் - இன்று
சிதைக்கப்பட்ட நிலையில்
ஊனக் குயில்களாய்
தானுண்டு தன் வீடுண்டு என
வாழ்வதே சொர்க்கமாய்
T. V யும் வானொலியும்
உணர்வுகளைத் திசை திருப்ப
பல இன்னல்களை - எம்
இதயத்திலே புதைத்து வைத்து
கேள்வியும் பதிலும் இங்கு
நாமாக மாறி வாழும்
அர்த்தமில்லா வாழ்வினிலே
உரிமையுணர்வு எம்மை விட்டு
தொலைந்து போனதினால்
அன்னியப்பட்ட நிலையில் - நாம்
அலை மோதும் போதினிலே ...
உயிர்ப்பின் உன்னதத்தை - நாம்
உணராமல் போனதுவேன் ...?

குறிஞ்சி மகள்
புனித சவேரியார் கோவில்
திருநெல்வேலி.

## பரிசுத்த ஆவியின் பெருவிழாவை முன்னிட்டு எழுதப்பட்ட சிறப்புக்கவிதை

## அஞ்ஞான இருளுக்கு ஒளியாய் இறங்கும்!

ஊன்கொண்ட மனிதரில் உள்ளமாய் விளங்கும்
வான்நிறை வரமே வல்லமைக் கரமே !
உருளும் உலகில் உயிர்களை இயக்க
அருளாய் இறங்கும் ஆண்டவன்! ஆவியே!
இவ்வுலக எல்லைக்குள் இறுகிநாம் அழியாது
அவ்வுலகு சுவைத்திருக்க அருளாவி தந்தருளும்
தேவனின் அரசைத் தெளிவாக அறிவிக்கத்
திருவுளம் கனியும் தெய்வீக ஆவியே!
அர்ச்சித்து ஆழப்படுத்தி அடியோரைப் புதுப்பிக்கும்
நற்செய்திக் காவலர்க்கு ஞானத்தினாவி பொழிந்தருளும்
தலையான எம்ஏழு பாவங்கள் பரிகரிக்க
நிலையான உம்ஏழு கொடையருளி இரட்சியும்.
" நாங்களே திருச்சபை " என்றமுழு அர்ப்பணம்.
தீங்கின்றி நிறைவேறத் திசைகாட்டி நின் றருளும்.
அஞ்ஞான இருளுக்கு அப்பால் உள்ள
மெய்ஞ்ஞான ஒளியே! மேதினிக்கு வருவீர்!
வேதனை சோதனை தேவைகள் ஏக்கத்தில்
ஆதாரம் தருவீர் ஆலோசனை ஆவியே!

— ஞா. அரியமலர்
மிருசுவில்

### 5ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



ம. கிறிசோஸ்ரம் பொன்ராசா
(கரம்பொன்)

மலர்வு 9-10-1916 உதிர்வு 15-5-1993

*சீவியத்தில் என்னை நேசித்தவர்களே!*
*மரணத்திலும் என்னை மறவாதீர்கள்.*

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

A/78/98

### அருள்திரு. லோ. வ. இராயப்பு O.M.I., S.T.D. அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



போதுமப்பா உனது பணி பொன்னடிக்கு
வந்துவிடு பொல்லாத மண்ணைவிட்டு
வாதுவினை மாய்கையுடன் வஞ்சனைகள்
மிஞ்சிமிக வைராக்கிய மேறிப்போச்சு
குதுபழி யறியாத சுடர் வீசுமுந்தனுக்குச்
சொர்க்கத்தில் இடமேயுண்டு —
இன்னும் பல டணிகள் ஏராளமாயிருக்க
ஏழாண்டு முன்னதாக இறைவன் உமையழைத்த
காரணம்தான் நாமறியோம்.

கண்ணீருடன் கலங்கி நிற்கும்
சகோதரர் குடும்பத்தினர்.

A/76/98

### மன்றாட்டுக்கள்... (2ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ இளைஞர்களுக்காக மன்றாடுவோம்.

இவர்கள் நம்பிக்கை நிறைந்த கிறிஸ்துவின் சாட்சிகள் என்பதை தூயஆவியால் உறுதிப்படுத்தி தொடர்பு சாதனங்களில் நம்பிக்கை இழந்து இருளான சூழ்நிலைக்கு இட்டுச் செல்வதிறை விலக்க அருள் புரிய வேண்டுமென்று இறைவா...

பதில்: ஆண்டவரே...

★ பூமியில் வாழும் அனைவருக்காகவும் ஜெபிப்போம்.

தொடர்புகளை ஏற்படுத்தும் சாதனங்கள் உண்மையான செய்திகளைப் பரிமாறும் ஒரு பொது மன்றமாகவும் உருவாக்கும் எண்ணங்களாகவும் நல்ல மதிப்பீடுகளைக் கொண்டதாகவும் இருக்க வேண்டுமென்றும், அதனால் நீதியும், அன்புப் அடிப்படையாகக் கொண்ட மானிட குழுமம் உருவாகி நிலைபெறவும் வேண்டுமென்று இறைவா ......

பதில்: ஆண்டவரே...

## தொடர்பு சாதனங்களில்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றது. கட்டுப்பாடற்ற புதிய திரைப்படங்களின் இறக்குமதியும் இதற்கு ஒரு காரணமாகும், இலாபம் ஒன்றே இதன் குறிக்கோள். சமூகப் பொறுப்புணர்ச்சி இவர்களுக்குக் கிடையாது. அத்துடன் இன்று பாரம்பரிய கலைகளைவிட தன்னிசைப் பாடல்களே இளையோரால் விரும்பப்படுகின்றது. அண்மையில் நடைபெற்ற 'இன்னிசை நிகழ்ச்சிகள்' கலாசாரப் பாதிப்பை உண்டு பண்ணும் ஒரு நிகழ்வே.

இவைகளிலிருந்து சமுதாய மாற்றத்தில் தொடர்பு சாதனங்கள் ஆற்றும் அளப்பரிய பங்கினை உணர்ந்து கொள்ளலாம். இவைகள் தமது பாதையை சரியான திசையில் மாற்றிக் கொள்ளாதவரை சமுதாய மேம்பாடு படுகுழியில் தள்ளப்படும் அபாயம் உள்ளது. ஊடகங்கள் மட்டுமே இதற்குப் பொறுப்பு எனக் கூறிவிட முடியாது. அந்த மாற்றம் முழுச் சமுதாயத்திலும் தங்கியுள்ளது. மொத்த சமுதாயமும் விழிப்புணர்வோடு இந்த மாற்றத்துக்கான முயற்சிகளில் ஈடுபட்டாலன்றி தொடர்பு ஊடகங்களால் பரவிவரும் தீமைகளை தவிர்ப்பது சாத்தியமல்ல. ஏனெனில் மக்களின் மீது திணிக்கப்பட்டுள்ள மறைமுகமான ஒரு பேபரே இதுவாகும். இதிலிருந்து தப்பும் மார்க்கத்தை தேடாவிடில் கிறிஸ்தவ பண்பாட்டுக் கோலங்கள் நாளுக்கு நாள் சிதைவுறுவதை யாராலும் தடுக்க முடியாது போகலாம்.

### 6ஆம் வருட நினைவு



P. S. ஞானப்பிரகாசம்

தோற்றம் 30-08-1911 மறைவு 23-05-1992

பப்பா, ஆறு வருடங்கள் ஆனாலும்,
ஆறாது எங்கள் துன்பம்.
மாறாது எங்கள் துன்பம்.

இவரது ஆன்ம சாந்திக்காக திருகோணமலை அர்ச். மரியாள் பேராலயத்தில் காலை 6 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல் A. S. A. அலெக்ஸ்
7, பேக்கரி றோட்,
திருகோணமலை. 31000

A/77/98

## மரண அறிவித்தல்

திருமதி பிறிட்ஜெட் –வேதநாயகம்

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பிறிட்ஜெட் வேதநாயகம் 22.04.1998 இல் இறைவனடி சேர்ந்துள்ளார். இவர் காலஞ்சென்ற வேதநாயகத்தின் அன்பு மனைவியும், திருமதி அனிற்றா இராஜன் அவர்களின் தாயாரும், சவரிமுத்து, செபஸ்தியாம்பிள்ளை (சில்லாலை முத்து வைத்தியர்) திருமதி ஞானபூமா ஞானப்பிரகாசம், அருட்சகோதரி லியோனி, திருமதி அன்னம்மா, பிலிப்புப்பிள்ளை, அருட்திரு. S. A. சுவாம்பிள்ளை, திருமதி றோசமுத்து அரசக்கோன், செல்வி திரேசா அன்ரனிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும்ஆவார். அன்னாரின்இறுதிச் சடங்குகள் யாழ். மரியன்னை பேராலயத்தில் 23.04.1998 அன்று அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அவர்களால் பலிப்பூசையுடன் நிறைவேற்றப்பட்டது.

தகவல்
செல்வி திரேசா
அன்ரனிப்பிள்ளை

A/79/98

## தொடக்கப்பள்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்கள். மற்றும் அருட்சகோதரி லியோ, மனித முன்னேற்ற நடுநிலைய ஊழியர் செல்வி. பத்மா, ஆகியோருடன் பல தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும் சமூகமளித்திருந்தார்கள். பரிசளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து அன்னை தெரேசா தொடக்கப் பள்ளி ஆசிரியர் செல்வி A. வதனாவின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது.

—எஸ். யேசுதாஸ்,
கொழும்புத்துறை

# "திருவுளம்" - திருவுளப்பணியோர் சபையின் இணைப்புக் கடிதப்பணி (News Letter Service)

திருவுளப்பணியோர் சபையின் தை – சித்திரை 1998 இணைப்புக்கடிதம், ''இயேசுக் கிறிஸ்துவில் சகோதரத்துவத்தையும், சமாதானத்தையும் உருவாக்குவோம்'' என்ற விருதுவாக்குடன் வெளிவந்துள்ளது.

திருவுளப்பணியோர் சபை ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இலங்கையில் இந்த சபை மறைந்த யாழ் ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையால் 1963ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு ஆகிய மறைமாவட்டங்களில் இவர்கள் பணியாற்றுகிறார்கள்.

இவர்களுக்கான பொது அமர்வு ஒன்று நடைபெற இருக்கின்றது. இந்த அமர்வில் இலங்கை மாவட்டத்தின் அதிபர் A. பிலிப் அடிகளார் கலந்து கொள்ளுவார்.

திருவுளப்பணியோர் சபை சிரேஸ்ர முதல்வர் கடந்த ஆண்டு இலங்கைக்கு வந்த போது இச்சபையை 3 வட்டாரங்களாக இயங்கும் படியும், செய்திகளைப் பரிமாற இணைப்பு கடிதப் பணியினை செய்யும் படியும் கூறியபடியால் ஏற்கனவே திருவுளப் பணியோர் என்ற தலைப்பில் சில ஆண்டுகளுக்கு முன் வெளிவந்து பின் போரினால் நிறுத்தப்பட்ட செய்திக் கடிதம் இப்போது 'திருவுளம்' என்ற பெயரில் வெளிவருகின்றது. இப் பணியை அருள் சகோதரர் அன்ரன் மரியதாஸ் பொறுப்பேற்று நடத்துவார்.

## க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான கிறிஸ்தவ பாடநெறி

க. பொ. த. (உயர் தரத்தில்) கிறிஸ்தவத்தை ஒரு பாடமாக எடுப்பவர்களுக்கான மீட்டல் வகுப்புக்கள் போயா தினங்களில் காலை 9.00 மணி முதல் மாலை 3மணி வரை புனித யோவான் கல்லூரியில் (ST. JOHN'S COLLEGE, JAFFNA) நடைபெறுகின்றது. புனித சவேரியார் குருத்துவ கல்லூரி விரிவுரையாளர்களான அருள்திரு. மங்களராஜா, அருள்திரு. மைக்கல் சவுந்தரநாயகம், அருள்திரு. பிலேந்திரன், புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியை மல்லிகா ஆகியோரும் கல்வி கற்பிக்கின்றனர்.

## S. E. N. குணசீலன் அடிகள் பண்டத்தரிப்பில்

திருநெல்வேலி – கோப்பாய் பங்குத்தந்தையாகக் கடமையாற்றிய அருள்திரு S. E. N. குணசீலன் தமது பங்குப்பணிகளில் இருந்து ஒய்வு பெற்று பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் தங்கியிருக்கின்றார்.


பாடல் போட்டி! பாடல் போட்டி!! பாடல் போட்டி!!!

தொடர்பு சாதன ஆணைக்குழு
நடாத்தும்

## புதிய பாடல் போட்டி

கிறிஸ்துவின் வருகையின் 2000 ஆம் ஆண்டு சிறப்பினை வெளிப்படுத்தும் புதிய பாடல்களை எழுதி,இசை அமைத்து குழுவாகவோ தனியாகவோ பாடல்களைப் பாடி அரங்கேற்றலாம்.

ஆலய பாடல் குழுவினர், தனிக்குழுக்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த ஆயத்தமாகி விண்ணப்பியுங்கள்.

கரு 1. கிறிஸ்துவின் வருகையின் 2000 ஆம் ஆண்டை சிறப்பிக்கும் கிறிஸ்தவ விழுமியங்கள் அடங்கியதாக.

2. தூய ஆவியின் ஆண்டின் சிறப்பினை வெளிப்படுத்துவனவாக.

★ ஒரு குழு இரு பாடல்களை போட்டியில் பாடிக்காட்டலாம்.

★ போட்டிகளுக்கான விண்ணப்ப திகதி: 10–06–98

★ போட்டி நடைபெறும் திகதி: 26–06–98

தெரிவாகும் பாடல் ஒலிப்பதிவு நாடாவிலும், வானொலியிலும் வெளியிடப்படும். சிறந்த பரிசும் உண்டு.

உங்கள் விண்ணப்பங்களை பங்குத் தந்தையரின் சிபார்சுடன் அனுப்புங்கள்.

தொடர்புச் சாதன ஆணைக்குழு
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

A/80/98


## இன்றைய சூழலில் கைவிடப்பட்டோரின் பாதுகாவலர் பரிந்துரைப்பார்

— அரியாலையில் மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள்

வட இலங்கையின் மிகவும் பிரசித்தி பெற்ற யாத்திரை ஸ்தலமாகத் திகழும் புனித யூதாததேயு யாத்திரைத் தல திருவிழா பங்குத்தந்தை யேசுதாசன் சந்திரன் அடிகளின் அமைப்பில் வெகு சிறப்பாக நடந்தேறியது. ஆலய பிரதேசம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட இடமாக இருந்தாலும் கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரிடம் அருள் வேண்டி ஏராளமான பக்தர்கள் வந்து கலந்து கொண்டனர்.

மேற்படி விழாவின் போதே "இன்றைய சூழலில் கைவிடப்பட்டு அந்தரிக்கும் நம் மக்களுக்கு கைவிடப்பட்டோரின் பாதுகாவலர் பரிந்துரைப்பார்" என்று திருநாள் திருப்பலி நிறைவேற்றிய மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் மறையுரையில் தெரிவித்தார்.

மூன்றுநாட்கள் நடைபெற்ற ஆயத்த நாட்களின் பின் திருநாள் திருப்பலியை அருள்திரு. கிருபாகரன், அருள் திரு. சாள்ஸ் கொலின்ஸ், பங்குத் தந்தை அருள்திரு. யேசுதாசன் சந்திரன் ஆகியோர் ஒப்புக் கொடுத்தனர்.

— A. J. குலசிங்கம்
அரியாலை

## திருவழிபாட்டுக் கருத்தரங்குகளை பங்குகளில் ஒழுங்கு செய்ய திருவழிபாட்டு நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்

திருவழிபாடுகளில் மக்கள் அர்த்தமுள்ள முறையில் பங்கெடுக்கவும், வழிபாடுபற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளவும் வழிபாட்டு நிலையம் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து வருகின்றது. கருத்தரங்கானது.

1. வழிபாடு பற்றிய பொது அறிமுகம்
2. திருப்பலி
3. திருவழிபாட்டில் திருஇசை
4. பண்பாட்டு மயமாக்கல்
5. பக்தி முயச்சிகள் போன்ற மையப் பொருட்களை உள்ளடக்கியுள்ளன.

மேற்படிக்கருத்தரங்குகளை குறிப்பிட்ட மையப்பொருட்களில் ஒழுங்கு படுத்தவிரும்புபவர்கள் திருவழிபாட்டு நிலையத்தோடு பங்குத்தந்தையூடாக தொடர்புகொள்ளவும்.

## கேகாலை மாவட்ட மறையாசியர்களுக்கு கருத்தரங்கு

கேகாலை மாவட்ட மறையாசிரியர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு 27-03-98 அன்று தெய்யோவிற்ற புனித அந்தோனியார் ஆலய பாலர் பாடசாலை மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இக்கருத்தரங்கு தமிழ் சிங்கள இரு மொழிகளிலும் வெவ்வேறாக நடைபெற்றது. தமிழில் மறையுரை நிகழ்த்துவதற்கு கொழும்பிலிருந்து அருட் சகோதரி சகாயம் அவர்கள் வருகை தந்தார்கள். அவர்கள் ''விவிலியத்தின் நவீன யுகங்கள்,'' ''திருவிவிலியமும் அதன் பூலோக பின்னணியும்,'' ''விவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நூல்கள்'' போன்ற தலைப்பிலான கருத்துக்களுக்கு விளக்கம் அளித்தார்கள். அதன் பிறகு பகல் போசன இடைவேளையின் பின் எமது இரத்தினபுரி மறைமாவட்ட மறைக் கல்வி இயக்குனர் அருள்திரு ரோளன் பெர்னான்டோ அடிகளார் ''திரு வழிபாடு'' எனும் தலைப்பில் திருவழிபாட்டு ஆண்டு ஆரம்பம், திருவருகைக் காலம், ( ஆகமன காலம் ) பொதுக்காலம், தவக்காலம், பாஸ்கா காலம் போன்ற திருவழிபாடு ஆண்டின் பகுதிகளை அழகாக விளக்கினார். சிங்களத்தில் விளக்கமளித்த இவ்வுரையை அருட் சகோதரி சகாயம் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்தார். இக்கருத்தரங்கில் மாவிபொட, தெய்யோவிட்ட, எட்டியாந்தோட்டை, குருகல்ல போன்ற பங்குகளிலிருந்து தமிழ் சிங்கள மறையாசிரியர்கள் சுமார் 50 பேர் கலந்து கொண்டார்கள்.

திருமதி. ஸ்டெலா ஸ்டீவன்
எட்டியாந் தோட்டை

## புனித யோவான் கல்லூரியின் 175வது ஆண்டு (St. John's College)

யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரிகளில் ஒன்றாக விளங்கும் புனித யோவான் கல்லூரி தனது 175வது ஆண்டு நிறைவை இம் மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் கொண்டாடியது. இந் நிகழ்வில் குருநாகல் ஆயர் அன்ரு குமரகே கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இங்கிலாந்தில் இருந்து இலங்கைக்கு வந்த அருள்திரு யோசவ் நைற்றினாவால் 1823 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மேற்படி கல்லூரியானது கடந்த 175 ஆண்டுகளாக படிப்படியாக வளர்ந்து உயர்ந்து யாழ் நகரின் தலைசிறந்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்றது.

பல கல்விமான்களையும் உருவாக்கி வளர்த்துவிட்ட இக் கல்லூரியின் 175 வது ஆண்டு நிறைவில் பாதுகாவலனின் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

## தொடக்கப் பள்ளியில் தடகளப் போட்டிகள்

கொழும்புத்துறை, புனித செபமாலை அன்னை ஆலயத்தில் யாழ். மனித முன்னேற்ற நடுநிலையத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் 'அன்னை தெரேசா' தொடக்கப்பள்ளியின் சிறுவர்களுக்கான தடகளப் போட்டிகள் 30.04.98 புதன்கிழமை மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மனித முன்னேற்ற நடுநிலைய முந்நாள் இயக்குனரான எஸ், சூசைநாதன் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக அரியாலைப் பங்குத் தந்தை யேசுதாசன் சந்திரன் அடிகளாரும் கலந்து சிறப்பித்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## ஜனாதிபதிக்கு யாழ். ஆயர் மீண்டும் கடிதம்

வன்னியில் இருந்து திரும்பிய யாழ் ஆயர் கொழும்பில் இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்காவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

யாழ்ப்பாணத்திற்கும், மன்னாரிற்கும் செல்லுவதற்கு கப்பலைப் பார்த்துக் கொண்டு ஏராளமானவர்கள் காத்து நிற்கவேண்டிய ஒரு நிலை உருவாகியுள்ளது. இதனால் இவர்கள் பல அனாவசிய கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும் உள்ளாகிறார்கள். இந்தநிலை பற்றி மீண்டும் ஒருதடவை தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம். ஆவன செய்விர்கள் என்று எதிர்பார்க்கின்றோம் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மெசியா தாம் மாட்சியடைவதற்கு முன் இத்துன்பங்களைப் படவேண்டும் அல்லவா? (லூக். 24: 26)

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1998ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது P188